**காவல்துறை தலைவர், இருப்புப்பாதை, சென்னை அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை: திருமதி.வே.வனிதா இ.கா.ப.,**

ந.க.எண்:அ2/370/2020 நாள்: 18.03.2020.
அ.ஆ எண்: 31/2020

சிறு தலைப்பு: காவல் - இருப்புப்பாதை காவல் - பணியமைப்பு –கருணை அடிப்படை பணி நியமனம் - கணினி விபர பதிவாளர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராக பணி நியமனம் பெற்று பணிபுரிந்துவரும் திரு.S.முனியசாமி, என்பவரின் தற்காலிக பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறைப்படுத்தி ஆணையிடுதல் - தொடர்பாக.

படிக்கப்பட்டவை:
1. அரசாணை(நிலை)எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ-1) துறை, நாள் 02.03.2016.
2. தலைமையலுவலக சுற்றறிக்கை குறிப்பாணை ந.க.எண் 41769/C.A.R.1/2016, நாள் 21.12.2017
3. அரசாணை(நிலை)எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த(எம்) துறை, நாள் 01.08.2018
4. தலைமையலுவலக மேல்வரைவு ந.க.எண் 21080/C.A.R.1/2018, நாள் 25.09.2018

*****

**ஆணை:-**

திரு.S.முனியசாமி, இளநிலை உதவியாளர், காவல்துறை இயக்குநர் அலுவலகம், இருப்புப்பாதை, சென்னை என்பவர் தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண் 1433/சி.ஏ.1/2005-3, நாள் 13.07.2005-ன் படி கருணை அடிப்படையில் கணினி விபர பதிவாளராக 22.08.2005 மு.ப இராமநாதபுரம் மாவட்ட காவல் அலுவலகத்தில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார். அரசாணை (நிலை) எண்.220, உள்(காவல்.15)துறை, நாள் 18.02.2016-ன் படி கணினி விபர பதிவு ஊழியர் பதவியில் 01.05.2007 முதல் அவரது தற்காலிக பணி வரன்முறை செய்யப்பட்டு பின்னர் 30.04.2009 பி.ப கணினி விபர பதிவு ஊழியர் பதவியில தகுதிகாண் பருவம் முடித்து ஆணையிடப்பட்டுள்ளது. தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண் 84761/என்.ஜி.பி2(2)/2018. நாள்-02.08.2018-ன் படி இவர் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு 31.08.2018 பி.ப முதல் இவ்வலுவலகத்தில் பணிபுரிந்து 30.09.2019 பி.ப அன்று சென்னை பெருநகர காவல் அலுவலகத்திற்கு பணியட மாறுதலில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

2. மேற்படி திருS.முனியசாமி என்பவரின் கருணை அடிப்படை பணி நியமனம் கோரும் 19.01.2000 நாளன்றைய மனுவானது அவரது தந்தை சாத்தையா இறந்த தேதி-01.07.1997-யிலிருந்து 3 ஆண்டு கால அளவிற்குள் பெறப்பட்டுள்ளது. திரு.S.முனியசாமி என்பவரது பிறந்த தேதி 30.07.1980 ஆகும். கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி மனு சமர்ப்பிக்கும் நாளில் இவருக்கு 18 வயது நிறைவடைந்துள்ளதாலும், அரசாணை (நிலை) எண்.155, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ-1) துறை, நாள் 10.12.2014-ன் படி 04.05.2010-க்கு பினனர் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி மனு சமர்பிப்பவர்கள் மட்டும் 18 வயது நிறைவடைந்திருக்க வேண்டும் என்பதாலும், மேற்படி நிபந்தனையிலிருந்து விலக்கு பெறுகிறார்.

மேலும் அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ-1) துறை, நாள் 03.08.1977-ன் படி மேற்படி இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான கல்வி தகுதியினை நிறைவு செய்துள்ளார்.

3. எனவே, பார்வை 3-ல் காணும் அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எம்) துறை, நாள்.01.08.2018 மற்றும் தலைமையலுவலக மேல்வரைவு ந.க.எண். **21080/C.A.R.1/2018**, நாள் 25.09.2018 ஆகியவைகளின் படி 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எவ்வித விதிதளர்வுகளும் மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாததாலும், இளநிலை உதவியாளர் திரு.S.முனியசாமி என்பவரின் தற்காலிக பணியினை அவர் இளநிலை உதவியாளராக பணிக்கு அறிக்கை செய்த நாளான 31.08.2018 பி.ப முதல் அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணி வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது. மேற்படியாளர் பணிவரன்முறைப்படுத்தப்பட்ட நாள் முதல் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்குள் இரண்டு ஆண்டு காலம் பணியினை திருப்திகரமாக நிறைவு செய்வதுடன் பவானிசாகர் அரசு அலுவலர் அடிப்படை பயிற்சியினையும் நிறைவு செய்து தேர்ச்சி பெறும் வரை தகுதிகாண் பருவத்தினராக கருதப்படுவார்.

4. இவ்வாணையினை பெற்றுக்கொண்டமைக்கு ஏற்பளிக்கவும்.

ஒம்/- வே.வனிதா,
காவல்துறை தலைவர்
இருப்புப்பாதை, சென்னை.

பெறுநர்
திரு.S.முனியசாமி, இளநிலை உதவியாளர்,
பெருநகர காவல் ஆணையர் அலுவலகம்,
சென்னை-7

நகல்:
காவல்துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை-4
அலுவலக ஆணை புத்தகம்,
பணிப்புத்தகம் மற்றும் உதிரி

// உ.ந.உ.ப.அ //

18/3/2022
நிர்வாக அலுவலர்